இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

## இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் இந்திய CEO சம்மேளன சபை உறுப்பினர்களுடன் கொவிட்டுக்கு பின்னரான பொருளாதார மீட்சி குறித்த காணொளி மாநாடு

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக பிரிவின் தலைமை அதிகாரி திருமதி சுஜா கே மேனன் அவர்கள் இந்திய CEO சம்மேளன சபை உறுப்பினர்களுடன் (ICF) காணொளி மாநாடொன்றில் நேற்று முன்தினம் (12 மே 2020) உரையாடினார்.

2. கொவிட் 19 இன் பின்னர் மேலெழும் சவால்கள் மற்றும் துரித பொருளாதார மீட்சிக்காக தொழில்துறையினரும் அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக இந்திய CEO சம்மேளன சபை உறுப்பினர்கள் (ICF) இங்கு சுட்டிக்காட்டியிருந்தனர். தனியார் நிறுவனங்களுக்கும் குறித்த துறைகளில் சவால்கள், நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும் கொவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் தோன்றியுள்ள வாய்ப்புக்கள் தொடர்பாக சுட்டிக்காட்டிய ICF உறுப்பினர்கள் எதிர்கால தோற்றப்பாடு குறித்து மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுகின்றனர்.

3. இலங்கை பொருளாதாரத்தின் மீட்சியில் கொண்டிருக்கும் நம்பிக்கையை சுட்டிக்காட்டி ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்த உறுப்பினர்களுக்கு திருமதி சுஜா கே மேனன் அவர்கள் பாராட்டுக்களை தெரிவித்தார். அத்துடன் இலங்கையுடன்

மிகவும் நெருக்கமான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பினை பேணும் அதேவேளை, அபிவிருத்திக்கான தனது ஒத்துழைப்பையும் இந்தியா தொடருமென அவர் குறிப்பிட் டார். நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்படும்போது முதலில் ஆதரவளிப்பதில் இந்தியாவின் வகிபாகத்தினை சுட்டிக்காட்டிய அவர் , கொவிட் 19 நோய்க்கு எதிரான வலுவான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இந்தியாவால் நான்கு தொகுதி மருந்துப்பொருட்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தமையையும் குறிப்பிட்டிருந்தார். உள்ளூர் வேலைவாய்ப்புக்கள், முதலீடுகள் மற்றும் தொழில்நுட்ப தொழில்திறன் மாற்றங்கள் ஆகியவற்றின் ஊடாக இலங்கை பொருளாதாரத்தை வலுவாக்குவதில் ICF இன் வகிபாகத்தை பாராட்டியிருந்த அவர், பொருளாதார வர்த்தக விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் மூலமாக இலங்கை-இந்திய உறவுகள் மேம்படுவதில் ICF இன் பங்களிப்புக்காக நன்றிகளையும் தெரிவித்திருந்தார்.

*****

கொழும்பு

13 மே 2020